மாண்புமிகு பேரவைத் தலைவர் ; கேள்வி நிலக்கரி சுரங்கத்தில் உற்பத்தியைப் பற்றியது. அவர்களுக்குப் பட்டா கொடுத்தால் என்ன, கொடுக்காவிட்டால் என்ன ? மின்சாரத்தைப் பற்றிய கேள்வியாகக் கேளுங்கள்,

[முற்பகல் 9.10]

திரு. எல். இளையபெருமாள்: மின்சாரத்தைப் பற்றிக்கேட்கிறேன் 150 மிலியன் யூனிட் மின்சாரம் இயந்திரக்கோளாறால் நமக்குக் குறைவுபடும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்கு மாற்றுத் திட்டமாக அதை ஈடு செய்ய அரசு என்ன வழிவகை செய்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தனிக் கேள்வி போட்டால் விவரம் தர இயலும்.

ஏழுமாத்தூரில் துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம்.

*வினா எண் 122—திரு. ச. பாலகிருஷ்ணன : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மொடக்குறிச்சித் தொகுதியில் ஏழுமாத்தூருக்கு அருகில் துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் உள்ளதா ?

(ஆ) அதற்கான இடம் தெரிவு செய்யப்பட்டுவிட்டதா ?

(இ) அதற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ), (ஆ) மற்றும் (இ): ஆம். மொடக்குறிச்சித் தொகுதியில் ஏழுமாத்தூரில் ஒரு 110 கே. வி. துணை மின் நிலையம் அமைப்பதற்கு இடம் தெரிவு செய்வதற்கான ஆரம்ப ஆயத்தங்கள் செய்யப்பட்டு வருகின்றன. ஏழுமாத்தூரில் ஒரு 110 கே.வி. மின் நிலையமும், பவானியில் ஒரு 110 கே வி. மின் நிலையமும் அமைப்பதற்கு கிராம மின் வசதிக் கழகம் ரூ. 88,124 இலட்சத்திற்கான திட்டத்தை ரூ. 52.94 இலட்சம் கடன் உதவியுடன் அனுமதித்துள்ளது.

திரு ச. பாலகிருஷ்ணன்: ஏழுமாத்தூரில் துணைமின் நிலையம் அமைப்பதற்கான இடம் மலை அடிவாரத்தில் தெரிவு செய்யப்பட்டிருக்கிறது. அதற்குத் தற்போது ஒதுக்கப்பட்டுள்ள நிதி போதாததாக இருக்கும். ஆகவே, கூடுதல் நிதி ஒதுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தேவைப்படின் கூடுதல் நிதி ஒதுக்கம் செய்யப்படும்.